அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம்,
லோறன்ஸ்கூக்
ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER,
LØRENSKOG

## வணக்கம்!

### கல்வி – சனிக்கிழமை - 09:30 -13:00 (10:45 - 11:15)

-சித்திரை விழாவை முன்னிட்டு அந்த விழா நாள்13.04.2024 வரைக்கும் **பாடசாலை நிறைவடையும் நேரம் 13.00** மணியாக அறிவிக்கின்றோம்.

கடந்த சனிக்கிழமை - நாடளாவிய அன்னை தமிழ்முற்றப் பேச்சுப் போட்டி இடம்பெற்றது. பங்குகொண்டு சிறப்பித்த அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வெற்றி பெற்ற எமது வளாகத்தைச் சேர்ந்த மாணவர்களின் விபரம் விரைவில் அறிவிக்கப்படும்.

### கலைவகுப்புகள் - சனிக்கிழமை

வழமைபோல் வழங்கப்பட்ட நேரத்தில் நடைபெறும். மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் அறியத்தருவார்கள்.

**கலைப்பாடத்திற்கு புதிதாக இணைய வரும் மாணவர்களை சித்திரை விழா நாள் அதாவது 13.04.2024 வரை இணைப்பதை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்துள்ளோம்.**

புதிதாக இணைய விரும்பும் மாணவர்கள் சித்திரை விழா முடிந்த அடுத்த கிழமையே ஆரம்பிக்கலாம்.

சித்திரை விழா முடிந்து புதிதாக ஆரம்பிக்கும் மாணவர்களுக்கு ஒரு மாத இலவச பயிற்சி மட்டுமே வழங்கப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவலுக்கு கலைப் பொறுப்பாளரை தொடர்பு கொள்ளவும்.

### 16.03.2024 விளையாட்டுப்போட்டி 2024 - பெற்றோர் கூட்டம்

விளையாட்டு போட்டி கூட்டம் சிறப்பாகநடைபெற்றது, பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றி.

கூட்ட அறிக்கை தமிழிலும் வாழிடம் மொழியிலும் இணைக்கப்பட்டுள்ளது.
-தமிழ் கூட்ட அறிக்கை.
-Referat på Norsk.

### 06.04.2024 பெற்றோர் கூட்டம் - ஆண்டுக்கூட்டத்தின் தொடர்ச்சி, இல்லப் பொறுப்பாளர் தெரிவு

02.03.2024 அன்று நடைபெற்ற ஆண்டுக்கூட்டத்தின் தொடர்ச்சியாக எதிர்வரும் 06.04.2024 சனிக்கிழமை கூட்டம் நடாத்த தீர்மானித்துள்ளோம். அன்று முற்றுப்பெறாத முக்கிய விடயங்களை கலந்து ஆலோசித்து தீர்வை எட்டவும், தொடர்ச்சியாக 2024 விளையாட்டுப்போட்டி சம்பந்தமான கலந்துரையாடல் மற்றும் இல்லப் பொறுப்பாளர் தெரிவு, பொறுப்புப் பகிர்வு என்பன நடைபெறும்.

### நிதி 2024

இதுவரை அறவிடப்பட்ட அனைத்து கட்டணங்களையும் செலுத்தும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.

உங்கள் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதா? கட்டண அறவீட்டு தகவல் கிடைக்கவில்லையா? என்பதை சரிபார்த்து கொள்ளவும். இதில் ஏதும் ஐயப்பாடு இருப்பின் நிதிப் பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல்: faktura.lorenskog@annai.no

குறிப்பு:
எதிர்வரும் விளையாட்டு போட்டி, பாடசாலை சார்ந்த பொறுப்புகள் மற்றும் கல்வி ஆண்டு 2024/2025 பங்கு பெறுவதற்கு முழுமை பெற்ற அங்கத்தவராக இருக்க வேண்டும்.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் லோறன்ஸ்கூக் வளாகத்தின் முழுமை பெற்ற உறுப்பினர் பட்டியல் அனுப்பப்படும்.

## எமது வளாக இக்கல்வியாண்டில் நடைபெறவுள்ள நிகழ்வுகள்

**06.04.2024** பெற்றோர் கூட்டம் - ஆண்டுக்கூட்டத்தின் தொடர்ச்சி, இல்லப் பொறுப்பாளர் தெரிவு
**13.04.2024** சித்திரை விழா, Åsen skole
**14.04.2024** (ஞாயிற்றுக்கிழமை) சிறுவர் கதை சொல்லும் போட்டி மற்றும் திருக்குறள் ஒப்பித்தல் போட்டிகள் றொம்மன் வளாகத்தில் நடைபெறும். நேரம் பின்பு அறியத்தரப்படும்.
**09.06.2024** விளையாட்டுப்போட்டி.

குறிப்பு: சூழ்நிலைக்கேற்ப வரும் மாற்றங்களுக்கு எம்மை புரிந்துணர் வோடு தயார்நிலைப்படுத்துவோம்.

## தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!

நன்றி.

இவ்வண்ணம்
நிர்வாகம்
**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் லோறன்ஸ்கூக்**